# நீட் எதிர்ப்புக் கூட்டியக்கம் - தமிழ்நாடு நிர்வாகிகள் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினுடன் சந்திப்பு!







நீட் தேர்வுக்கு எதிராகத் தொடர்ந்து போராடி வரும் "நீட் எதிர்ப்புக் கூட்டியக்கம் – தமிழ்நாடு அமைப்பின் நிர்வாகிகள், நேற்று (21.09.2026) காலை, சென்னை அண்ணா அறிவாலயத்தில், திராவிட முன்னேற்றக் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்களைச் சந்தித்தனர். நீட் தேர்வுக்கு எதிரான போராட்டத்தில் தொடக்கம் முதலே உறுதியோடும் சமரசமின்றியும் செயல்பட்டு வரும் கழகத் தலைவர் அவர்களிடம், நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தி தாங்கள் மேற்கொண்டு வரும் செயல்பாடுகள் மற்றும் அடுத்தகட்ட முயற்சிகள் குறித்து கூட்டியக்கத்தினர் விளக்கி, அவரது ஆதரவைக் கோரினர். குறிப்பாக, நீட் எதிர்ப்பைத் தமிழ்நாட்டைக் கடந்து இந்திய அளவில் வலுப்படுத்தும் வகையில் #BanNEET இணையவழிக் கையெழுத்து இயக்கத்தை முன்னெடுப்பது, நீட் தேர்வை ரத்து செய்ய வலியுறுத்தும் விழிப்புணர்வுக் காணொலியை வெளியிடுவது, சமூக வலைதளங்கள் வாயிலாகப் பரப்புரை மேற்கொள்வது, அரசியல் கட்சிகள், மாணவர் அமைப்புகள், சமூக இயக்கங்கள் மற்றும் கல்வி உரிமைக்காகக் குரல் கொடுக்கும் அமைப்புகளை ஒருங்கிணைப்பது உள்ளிட்ட தங்களது செயல்பாடுகள் குறித்து எடுத்துச் சொல்லி ஆதரவு கோரினர். நீட் எதிர்ப்பு கூட்டியக்கம் தமிழ்நாடு முன்னெடுக்கும் முயற்சிகளுக்கு ஆதரவு தெரிவித்த கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள், #BanNEET இணையவழிக் கையெழுத்து இயக்கத்தில் கையெழுத்திட்டு தனது ஆதரவையும் பதிவு செய்தார்.

### த.வெ.க. அரசைக் கண்டித்து சென்னையில்

## இன்று தொ.மு.ச. சார்பில் ஆர்ப்பாட்டம்!

### பேரவைத் தலைவர் கி.நடராசன் சிறப்புரை!

சென்னை, செப்.22-

மக்கள் விரோத, தொழிலாளர் விரோத, விவசாய விரோத, ஜனநாயக விரோத ஒன்றிய மோடி அரசையும் - மாநில விஜய் அரசையும் கண்டித்து இன்று (22.09.2026) மாலை 4.00 மணியளவில் சென்னை சைதாப்பேட்டையில் உள்ள கலைஞர் பொன்விழா வளைவு அருகில் தொ.மு.ச. சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது. இந்த ஆர்ப்பாட்டத்தில் தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரையாற்றுகிறார்.

ஒன்றியத்தை ஆளும் மோடி தலைமையிலான பா.ஜ.க. அரசு இந்திய மக்களின் உழைப்பால் உருவான பொதுத்துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்பது, நவரத்ன மகா, நவரத்னா நிறுவனங்களின் பங்குகளை தனியாருக்கு தாரை வார்ப்பது, தேசியப் பண மயமாக்கல் கொள்கை 2.0, அண்மையில் வெளியிடப்பட்டு தேசத்தின் சொத்துக்கள் தனியாருக்கு தாரை வார்க்க அல்லது குத்தகை என்ற பெயரால் வழங்கிட முடிவு, இந்திய தொழிலாளர் மாநாட்டை கூட்டாமலேயே தொகுப்புச் சட்டங்களையும், விதிகளையும் நடைமுறைப்படுத்த துடிப்பது உள்ளிட்ட பல்வேறு செயல்களைக் கண்டித்தும்,

மாநில த.வெ.க. ஆட்சியில் தூத்துக்குடி, எண்ணூர் அனல் மின்நிலைய விரிவாகப் பணிகளை தனியாருக்கு தாரை வார்க்கும் செயலில் ஈடுபட்டு வருகிறது. டாஸ்மாக் - அங்கன்வாடி பணியாளர்களை பணி நிரந்தரம் செய்து காலமுறை ஊதியம் வழங்கிடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன் வைத்து தொ.மு.ச. சார்பில் இன்று (22.09.2026) ஆர்ப்பாட்டம் சென்னை சைதாப்பேட்டையில் உள்ள கலைஞர் பொன் விழா வளைவு அருகில் நடைபெறுகிறது.

இந்த ஆர்ப்பாட்டத்திற்கு தொ.மு.ச. பேரவைத் தலைவர் கி.நடராசன் அவர்கள் கலந்து கொண்டுசிறப்புரையாற்றுகிறார். மேலும் ஆர்ப்பாட்டத்தில் சென்னை மாவட்டத்தில் உள்ள தொ.மு.ச. இணைப்புச் சங்க நிர்வாகிகள், செயல்வீரர்கள் அனைவரும் திரளாகக் கலந்து கொள்கின்றனர்.

## இந்த ஆண்டும் நர்சிங் கல்லூரி கிடையாதா? விழுப்புரம் மாவட்ட மக்கள் ஏமாற்றம்!

விழுப்புரம், செப். 22-

விழுப்புரம் மாவட்டத்தில் அரசு செவிலியர் கல்லூரி அமைக்கும் கோரிக்கை இந்த ஆண்டும் புறக்கணிக்கப்பட்டதால், பொதுமக்கள் ஏமாற்றம் அடைந்துள்ளனர்.

விழுப்புரம் மாவட்ட அரசு மருத்துவக் கல்லூரியில் கடந்தாண்டு நடந்த விழாவின் போது, அப்போதைய விக்கிரவாண்டி அன்னியூர் எம்.எல்.ஏ., சிவா பேசுகையில், 'கடந்த 2010ம் ஆண்டு முண்டியம்பாக்கம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனை துவக்கப்பட்டது. திண்டிவனம் டோல்கேட் முதல் தொழுதூர் டோல்கேட் வரை 140 கி.மீ., தேசிய நெடுஞ்சாலை யில் நடைபெறும் விபத்துகள் மற்றும், 7 சட்டசபை தொகுதிகளில் உள்ள கிராம மக்கள் பயன்படுத்தும்,

இந்த மருத்துவமனைக்கு செவிலியர் கல்லூரி ல்லூரி துவங்கிட வேண்டும்' என கோரிக்கை விடுத்தார். இதற்கு பின் பேசிய அப்போதைய சுகாதாரத் துறை அமைச்சர் சுப்ரமணியன், 'எம்.எல்.ஏ., கோரிக்கை யினை ஏற்று அடுத்தாண்டு நிச்சயமாக முண்டியம்பாக் கம் மருத்துவக் கல்லூரிக்கு செவிலியர் கல்லூரி துவங் கிட அனுமதி வழங்கப்படும்' எனஉறுதி அளித்தார்.

அதன் பிறகு, அன்னியூர் சிவா, தமிழக மக்கள் நல்வாழ்வு செயலர் செந்தில் குமாரை நேரில் சந்தித்து, கோரிக்கையை வலியுறுத்தியபோது, அவரும் அடுத்த ஆண்டு நிச்சயமாக விழுப்புரத்தில், செவிலியர் கல்லூரி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்கும் என உத்தரவாதம் அளித்தார்.

இந்நிலையில், தமிழகத்தில் புதிதாக 7 இடங்களில் செவிலியர் கல்லூரிகளை துவங்குவதற்கு அரசு உத்தரவு வெளியிடப்பட்டுள்ளது. அதன்படி நாமக்கல், திருச்சி, தருமபுரி, வேலூர், திருவண்ணாமலை மற்றும் திருநெல்வேலி அரசு மருத்து வக் கல்லூரிகளில், தலா 100 பி.எஸ்சி., செவிலியர் மாணவர் சேர்க்கை இடங்களுடன் 6 புதிய அரசு செவிலியர் கல்லூரிகள் உருவாக்கப்படும் என கூறப்பட்டுள்ளது.

**அரசுக்கு மாஜி எம்.எல்.ஏ., கண்டனம்!**

இந்தப் பட்டியலில், விழுப்புரம் அரசு மருத்துவக் கல்லூரி, இடம் பெறாதது, மக்களிடையே கடும் அதிருப்தியையும், ஏமாற்றத்தையும் ஏற்படுத்தியுள்ளது.

விழுப்புரம் மாவட்டத்தில் செவிலியர் கல்லூரி அமைக்கப்படாதது குறித்து, தி.மு.க., முன்னாள் எம்.எல்.ஏ., அன்னியூர் சிவா கூறுகையில், 'கடந்தாண்டு பொறுப்பில் இருந்த சுகாதாரத்துறை அமைச்சர் மற்றும் சுகாதாரத்துறை செயலர் ஆகியோர் உறுதி அளித்தனர். ஆனால், இந்த வாக்குறுதியை, புதிய அரசு புறக்கணித்திருப்பது; விழுப்புரம் மாவட்ட மக்களிடையே கடும் ஏமாற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. பொதுமக்களின் நலனைக் கருத்தில் கொள்ளாமல், கடந்த ஆட்சியின் போது மேற்கொள்ளப்பட்ட திட்டத்தை, கிடப் பில் போடும் புதிய அரசின் நடவடிக்கைகள் கண்டனத்திற்கு உரியது' என்றார்.

### திருவண்ணாமலை மாவட்ட தொ.மு.ச. சார்பில் – ஒன்றிய, மாநில அரசுகளின்

## தொழிலாளர் விரோதப் போக்கைக் கண்டித்து கண்டன ஆர்ப்பாட்டம்!

### தொ.மு.ச. மாநில துணைத் தலைவர் பி.கிருஷ்ணன் கண்டன உரை நிகழ்த்துகிறார்!

திருவண்ணாமலை, செப்.22-

ஒன்றிய மற்றும் மாநில அரசின் தொழிலாளர் விரோத, மக்கள் விரோத, விவசாயிகள் விரோத மற்றும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கண்டித்து, திருவண்ணாமலை மாவட்ட தொ.மு.ச., பேரவைச் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது. மாநில தொ.மு.ச., துணைத் தலைவர் பி.கிருஷ்ணன் கண்டன உரை நிகழ்த்துகிறார்.

இன்று (22.09.2026 - செவ்வாய்க்கிழமை) காலை 9.30 மணிக்கு, திருவண்ணா மலை, அண்ணா சிலை அருகில், ஒன்றிய மற்றும் மாநில அரசின் தொழிலாளர் விரோத, மக்கள் விரோத, விவசாயிகள் விரோத மற்றும் ஜனநாயக விரோத நடவடிக்கைகளை கண்டித்து, திருவண்ணா மலை மாவட்ட தொ.மு.ச., பேரவைச் சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

கண்டன ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்ட கவுன்சில் செயலாளர் ஆர்.ஆறுமுகம் தலைமை வகிக்கிறார்.

மாவட்ட தொ.மு.ச., அமைப்பாளர் பி.கே.ஏ. அருண், அரசு போக்குவரத்துக் கழக மண்டலத் தலைவர் ஜி.நடராஜன், மாநிலத் துணைத் தலைவர் ஈ.பி., நா.சரவணன், டாஸ்மாக் தலைவர் தா.ஆறுமுகம், சிவில் சப்ளை வி.குபேந்திரன், அமைப்புசாரா தொ.மு.ச., மாவட்ட அமைப்பாளர் பவர். அன்பரசு, தொ.மு.ச, மாவட்ட துணை அமைப்பாளர்கள் கி.சேட்டு, எஸ்.வி.ஆர். மணிகண்டன், த.அருணாச்சலம், பொ.தங்கமணி, என்.பொன்னுசாமி, அமைப்புசாரா தொ.மு.ச., மாவட்ட துணை அமைப்பாளர்கள் மெட்ராஸ் கே.சுப்பிர மணி, ஏ.டபள்யு. ஷாஜகான், இடப்பாளையம் ரவி, பு.பாலசுந்தர், இரா.அர்ச்சுணன், சி.ஜெயபிரகாஷ், இரா. அன்பரசு, ஆர்.கே.முத்துக்குமார் ஆகியோர் முன்னிலை வகிக்கின்றனர்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் தொழிலாளர் விரோத புதிய 4 சட்டங்களை எதிர்த்தும், குறுகிய கால வேலைவாய்ப்பு முறையை எதிர்த்தும், 8 மணி நேர வேலை பாதுகாத்திடவும், விவசாய கடன்களை முழுமையாக ரத்து செய்யக்கோரியும், டாஸ்மாஸ் சில்லரை விற்பனைக் கடையில் காலிப் பாட்டல்களை திருப்பப்பெறும் பணியில் டாஸ்மாக் ஊழியர்களை ஈடுபடுத்துவதைக் கண்டித்தும், மாநகராட்சியில் பணிபுரியும் தூய்மைப் பணியாளர்களை நிரந்தரப் படுத்தியக் கோரியும் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறவுள்ளது.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் தொ.மு.ச., பேரவை மாநிலத் துணைத் தலைவர் பி. கிருஷ்ணன் கண்டன உரை நிகழ்த்து கிறார்.

கண்டன ஆர்ப்பாட்டத்தில் அரசுப் போக்குவரத்துக் கழக எஸ். மோகனரங்கன், கே.சண்முகம், டாஸ்மாக் கா.சிட்டிபாபு, மு.மகாதேவன், மின்சார வாரியம் ஜி.ரமேஷ், சு. சேட்டு, கே.மோகனசுந்தரம், சிவில் சப்ளை ஏ.இந்திராணி, ஆர்.கனகசாந்தி உட்பட அமைப்புசாரா தொழிலாளர்களின் கூட்டமைப்பும் கலந்து கொள்கின்றனர்.

### தொ.மு.ச. பேரவை அறிவிப்பு

தொழிலாளர் முன்னேற்றச் சங்கப் பேரவையில் இணைந்து செயல்பட்டு வரும் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழக தொ.மு.சங்க (பதிவு எண். **176/KKM,** பேரவை இணைப்பு எண். 438)தின் நாகர்கோயில் மண்டல பணிமனைகள் மற்றும் மத்திய சங்க நிர்வாகிகள் தேர்தலை நடத்துவதற்கு மதுரை மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் எஸ்.கருணாநிதி தேர்தல் ஆணையாளராக நியமனம் செய்யப்படுகிறார். தேர்தல் விதிமுறைகள் மற்றும் தேர்தல் கால அட்டவணை ஆகியவை தேர்தல் ஆணையாளரால் தனியாக வெளியிடப்படும்.

கலைஞரகம்
சென்னை – 17
நாள்: 16.09.2026

**மு.சண்முகம்,**
பொதுச்செயலாளர்,
தொ.மு.ச. பேரவை



மதுராந்தகம் இடைத்தேர்தலில் சேலம் மாவட்ட கழகச் செயலாளரும் முன்னாள் அமைச்சருமான இரா. இராஜேந்திரன் சேலம் மத்திய மாவட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட ஜானகிபுரம், கள்ளபிரான்புரம் ஊராட்சிகளுக்குட்பட்ட 68, 69, 71, 72, 73 ஆகிய வாக்குச்சாவடிகளில் வாக்காளர்களை சந்தித்து, கழகத் தலைவர் அவர்களின் ஆட்சியில் தமிழ்நாட்டில் ஏற்பட்ட வளர்ச்சிக்கான திட்டங்களை எடுத்துக் கூறி வாக்கு சேகரித்தார். உடன் ஒன்றிய செயலாளர் சத்தியசாய்நாதன் , ஒன்றிய துணை செயலாளர்கள், கிளை செயலாளர்கள்,சார்பு அணி நிர்வாகிகள், கலந்துகொண்டனர்.





கழகத் தலைவர் தளபதியார் மற்றும் கழக இளைஞர் அணி செயலாளர் தமிழ்நாடு சட்டமன்ற எதிர்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் ஆகியோரின் ஆதரவு பெற்ற புதுச்சேரி மாநிலம், தட்டாஞ்சாவடி சட்டமன்றத் தொகுதி இடைத்தேர்தல் போட்டியிடும் வெற்றி வேட்பாளர் கு. சேது (எ) சேதுசெல்வம் அவர்களுக்கு உதயசூரியன் சின்னத்திற்கு விழுப்புரம் தெற்கு மாவட்ட தி.மு.க விற்கு ஒதுக்கப்பட்டுள்ள பூத்துகளில் விழுப்புரம் தெற்கு மாவட்ட கழக நிர்வாகிகளுடன் இணைந்து விழுப்புரம் தெற்கு மாவட்ட செயலாளர் டாக்டர் பொன்.கௌதமசிகாமணி தேர்தல் பணிகள் மேற்கொண்டார்.